கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), பழனி
வழக்கு எண் SC No. 144/2021
அரசுக்காக அ.சா. 12 சாட்சியின் சான்றுரைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்புச்சாமி | சாதி | : | |
| த/பெ | : | பழனிச்சாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |
| | | | தேதி | | 28.01.2025 |

2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறது.

**2, 4, 6, 7, 9, 10, 11, 15, 16, 17, 19, 20, 21, 22, 23, 24, 26, 27, 28, 29, 31, 33, 36, 37 எதிரிகள் வருகை. 1, 8, 13, 18, 25, 32 எதிரிகள் வருகை இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் டி.கே.எண்.புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது டீ கடை வைத்திருக்கிறேன். முன்பு விவசாயம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் இருப்பது என்னுடைய கையொப்பம் அல்ல.

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 05.01.2001–ஆம் தேதி 2.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் தயாரித்த பார்வை மகசரிலும், 2.30 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து உடைந்த கண்ணாடித்துண்டு, உடைந்த கரிபடிந்த கண்ணாடி பாட்டில்கள், நெளிந்த கரிபடிந்த பாட்டில் மூடி 3 எண்ணிக்கை, எரிந்த திரி துணிகள், ஓல்டுமங்கு உடைந்த பாட்டில் ஆகியவற்றை கைப்பற்றிய மகசரிலும் நான் சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு எரிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் அவர் முன்னிலையில் நான் சொல்ல சொல்ல என் முன்னிலையில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவர் சரியென ஒத்துக் கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி, பழனி.